07.08.2024 அ.வ. எண். 362/2019 பி.சா.1 ராணியம்மாள்

குறுக்கு விசாரணை

முதல் விசாரணை உறுதிக்கூற்று நான் தாக்கல் செய்தது தான். என் கணவர் பெயர் பழனி. என் கணவரும், 1ம் வாதியும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். 1ம் வாதியின் அக்கா ருக்மணியம்மாள் என்னுடைய மாமியார். ருக்மணியம்மாள் சகோதரி வள்ளியம்மாளுக்கும், அவருடைய கணவர் கன்னி கவுண்டருக்கும் பிறந்த மகன் தான் கே.ஏழுமலை என்றால் சரிதான். ஏழுமலை வாதி தரப்பில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பளம் வாங்கக்கூடிய வேலையில் இல்லை. என் கணவர் சொசைட்டியில் வேலை செய்துவந்தார். என் கணவர் வெங்கடேசன் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார். என் கணவர் வாங்கிய கிரய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தற்போது சாட்சி ஆரணி நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்ததாக சொல்கிறார். என் கணவர் கிரயம் வாங்கியது 6 ஏக்கர் 90 சென்ட் ஆகும். அடங்கல் கணக்கை தாக்கல் செய்துள்ளேன். 1ம் வாதிக்கு முதலில் கிரயம் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட நிலத்தின் பரப்பளவு 4 ஏக்கர் 90 சென்ட் ஆகும். 26.02.2008 ஆம் தேதி பொதுஅதிகார ஆவணம் கொடுத்தேன். பொது அதிகார ஆவணம் 4 ஏக்கர் 90 சென்ட்டிற்காக கொடுத்தேன். 30.06.2008 ஆம் தேதி செல்வம் என்பவருக்கு கிரயம் கொடுத்தேன். ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தது என்னுடைய கணவர் பழனி. பொது அதிகார ஆவணத்தில் பழனி சாட்சி கையெழுத்து போடவில்லை. நான் பொது அதிகார ஆவணம் கொடுத்தபிறகு தான் 1ம் வாதி வழக்கு தாக்கல் செய்தார். 30.06.2008 ஆம் தேதி பொது அதிகார ஆவணம் கொடுத்தபிறகு தான் வழக்கு தாக்கல் செய்தார். ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்த பிறகு பொது அதிகார ஆவணம் கொடுக்கவேண்டிய அவசியம் என்னவென்றால் நிறைய நாட்கள் காத்திருந்தும் கிரயம் செய்துகொள்ளவில்லை அதனால் பணம் தேவைப்பட்டது அதனால் பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தேன். 07.04.1998 ஆம் தேதி கிரய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தேன். 1ம் வாதி 3 தவணைகளில் பணம் கொடுத்தார், அதற்கு நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். ஒப்பந்தத்தின் பின்னால் கையெழுத்துபோட்டு பணம் வாங்கிக்கொண்டேன். ஒப்பந்தம்

அற்றுப்போய்விட்டது என்று 1ம் வாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை. ஒப்பந்தத்தை புதுப்பிக்கவில்லை என்று நான் அறிவிப்பு அனுப்பவில்லை. ஒப்பந்தத்தை புதுப்பிக்கவில்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன். 06.06.1999 ஆம் தேதி என் கணவர் உயிருடன் இருந்தார். 06.06.1999 தேதிய கையெழுத்து என்னுடையது இல்லை என்பதற்காக காவல்துறையில் புகார் கொடுக்கவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை. 06.06.1999 ஆம் தேதி முழு பணத்தையும் வாங்கிக்கொண்டு சொத்தின் சுவாதீனத்தையும் ஒப்படைத்துவிட்ட பிறகு காலக்கெடு ஏற்படுமா என்றால் சுவாதீனம் ஒப்படைக்கவில்லை. பணத்தை செலுத்தியிருந்தால் கிரய ஆவணம் எழுதிக்கொண்டிருக்கலாம். என் கணவருக்கு உடல்நலம் சரியில்லாமல் போனதால் சொத்தை விற்பனை செய்தோம். என் கணவர் சொசைட்டியில் கையாடல் செய்துவிட்டார் என்பதால் தான் சொத்தை விற்பனை செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. 06.06.1999 ஆம் தேதிக்கு பிறகு சொத்து என்னிடம் தான் இருக்கிறது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். முதல் விசாரணை உறுதிக்கூற்று பத்தி-10ல் தாவா சொத்து இன்றுவரை 3ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் இருந்துவருவதாக சொல்லியுள்ளேன். முதல் விசாரணை உறுதிக்கூற்று பத்தி-12ல் தாவா சொத்து தற்போது 4ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என சொல்லியுள்ளேன். பி.சா.ஆ.1 நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் தான். 3ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ள கிரய ஆவணம் பி.சா.ஆ.2 ஆகும். 26.06.2008 ஆம் தேதி பொது அதிகார ஆவணம் கொடுத்தபிறகும் நான் தான் சாட்சியம் அளிக்கிறேன். ஆரணி நீதிமன்றத்தில் இருந்துதான் அறிவிப்பு வந்தது. 30.06.2008 ஆம் தேதி கொடுத்த பொது அதிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 30.06.2008 ஆம் தேதி எழுதிய பொது அதிகார ஆவணத்திற்கான முத்திரைத்தாள் எங்கு வாங்கினேன் என்றால் ஆரணியில் வாங்கினேன், பெயர் தெரியவில்லை. 30.04.2008 தேதிய பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்யவேண்டிய காரணம் என்னவென்றால் நான் எதுவும் ரத்து செய்யவில்லை. 26.06.2008 தேதிய பொது அதிகார ஆவணத்தை சுந்தர் என்பவருக்கு எழுதிக்கொடுத்தேன். சுந்தர் எனக்கு உறவினர் கிடையாது, என் சமூகத்தை சேர்ந்தவரும் இல்லை. நீதிமன்றத்தில் வந்து

சுந்தர் என்னையும் என் கணவரையும் பார்த்தார், அவரை யாரும் எங்களுக்கு அறிமுகம் செய்துவைக்கவில்லை. பி.சா.ஆ.2ல் மின் இணைப்பு எண் என்ன சொல்லியுள்ளீர் என்றால் ஞாபகமில்லை. தற்போது 4 ஏக்கர் 90 சென்ட்டில் பயிர் செய்துள்ளேன். பணத்தை வாங்கிக்கொண்டபிறகு சொத்தின் உரிமை எங்களுக்கு முடிந்துவிட்டது என்றால் அவர்தான் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பி.சா.ஆ.1 பொது அதிகார ஆவணம் 4 ஏக்கர் 90 சென்ட் நிலத்திற்கு கொடுத்துள்ளேன். 1ம் வாதிக்கு என்ன சொத்து இருந்ததோ அதற்கு தான் ஒப்பந்தம் போட்டுக்கொடுத்தேன். பி.சா.ஆ.1 பொது அதிகார ஆவணத்தில் பணம் எதுவும் பெறவில்லை என்று கூறியுள்ளேன். பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் பணம் பெற்றுக்கொண்டேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சுந்தர் 30.06.2008 ஆம் தேதி வேறு ஒருவருக்கு கிரயம் கொடுத்துவிட்டார். 30.06.2008 ஆம் தேதி சொத்தை விற்றபிறகு பொது அதிகார முகவர் ஆவணம் தொடரவில்லை. பொது அதிகார முகவர் எந்தெந்த தேதியில் என்னிடம் கணக்கு காண்பித்தார் என்றால் ஞாபகமில்லை. பொது அதிகார முகவர் இந்த தொகைக்கு விற்பனை செய்துவிட்டார் என்பதற்கு கணக்கு காண்பிக்கவில்லை. பி.சா.ஆ.1 பொது அதிகார ஆவணம் எழுதியது, சாட்சி கையெழுத்து போட்டது யார் என்றால் ஞாபகமில்லை. பி.சா.ஆ.1 எழுதியபோது என் கணவர் உயிருடன் இருந்தார், அதில் அவர் சாட்சி கையெழுத்தும் போட்டுள்ளார். பி.சா.ஆ.1ல் ஏழுமலை என்பவர் சாட்சி கையெழுத்து போடவில்லை. பி.சா.ஆ.2ல் பக்கம்-1ல் பொது அதிகார ஆவணம் எந்த தேதியில் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு புரியவில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.